போவதில் பயனில்லை. பிறகு இம்மாதிரி நடந்துகொண்டே தான் இருக்கும். நம்முடைய நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு, அதற்காகத்தான் நான் விளக்கம் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் உள்ளத்தில் இருக்கிற காரணத்தினால், சுமுக முடிவு என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி குறிப்பிட்டு சுட்டிக் காட்டுவதன் மூலம் ஜாதி பற்றிய நிலைமைகள் ஏற்படக்கூடும். அவைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத் தான், அதைப் பற்றி விசாரணை நடத்தி சுமுகமான சூழ்நிலை ஏற்படவேண்டும். ஜாதி அடிப்படையில் மாணவர்கள் பிரிவதோ அல்லது வேறு வகையில் பிரிவதோ எதிர்காலத்திற்கு உகந்தது அல்ல என்று நான் தீவிரமாகக் கருதுவதன் காரணத்தினால் தான், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி மேலும் வளர்கின்ற அளவுக்குப் போகாத அளவுக்கு தடுத்து நிறுத்தவும், தொடர்ந்து நிலையான உறுதியான சுமுக முடிவு ஏற்பட வேண்டுமென்றுதான் அரசு கருதுகிறது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, அவையில் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) மதுரையில் கைநெசவாளர்கள் கைது செய்யப்பட்டதும் அதையொட்டிய கிளர்ச்சியும், மறியலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் மதுரை நகரில் பல்லாயிரக்கணக்கான கைநெசவாளர்கள் கடந்த 24—10—1970-ம் தேதி முதல் கூலி உயர்வு கோரி நடந்த கிளர்ச்சியில் 146 பேர்கள் கைது செய்யப்பட்டதும், தொடர்ந்து கிளர்ச்சியும், மறியலும் நடத்தவிருக்கும் நிலைமையினால் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது அரசின் அன்றாட அலுவல்களின் கீழ் வருகிற காரணத்தினால், இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) கிராம அதிகாரிகள் நடத்த இருக்கும் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சீமைச்சாமி அவர்கள்

"the proposed strike by the village officers in the State due to failure of Government to implement their demands presented to Government on 28th March 1970.

1970 நவம்பர் 27] [பேரவைத் தலைவர்]

என்ற காரணத்தை ஒட்டி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு நிகழ்ச்சி இனி நடைபெறப்போகிறது என்ற ஒரு காரணத்தைக் காட்டி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுக்கக்கூடாது என்பதினாலும், ஸ்ட்ரைக்குகளைப்பற்றி விவாதிப்பதற்கு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கக்கூடாது என்று விதி முறைகள் இருப்பதன் காரணத்தினாலும், இதற்கும் அனுமதிதர மறுக்கிறேன்.

(ஈ) உணவு தானியங்களின் விலைக்குறைவால் விவசாயிகளின் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கே. ஆர். நல்லசிவன் அவர்கள் உணவு தானியத்தின் தற்போதைய விலை நிலவரம் அதனை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவைவிட குறைந்துவிட்டதன் காரணமாக மாநிலத்திலுள்ள விவசாயிகளின் நிலை பாதிக்கப்பட்டு, உணவு தானிய உற்பத்தி குறையும் என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்கவேண்டும் என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

விலைவாசி உயர்வு தாழ்வு என்பது நாட்டிலே அவ்வப்பொழுது நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். ஆகவே, இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(உ) காவிரி நீர் குறித்து மைசூர், கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிடையே ஏற்பட்டுள்ள விவாதமும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. இராமமூர்த்தி அவர்கள்,

"The impact on our State because of the situation created over the Cauvery Water dispute between Mysore, Kerala and our
என்பதைப்பற்றி
விவாதிக்கவேண்டும் என்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்க இருக்கிற காரணத்தினால், நான் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: I am no disputing your ruling

இந்தப் பிரச்சினை பல்வேறு நேரங்களில் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. பல அறிக்கைகள் தரப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, இந்தப் பிரச்சினை முடிவடையாதது மட்டுமல்ல, மிகவும் பயங்கரமான விளைவுகளைப் பற்றி நம்முடைய அமைச்சர்கள் நாள்தோறும் விவாதிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுகளும், பல்வேறு அரசியல் காரணங்களும் தலைவர்கள் மீது சுமத்தப்படுகின்றன. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்கவேண்டிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன......